தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விஜய, ஐப்பசி 6, திருவள்ளுவர் ஆண்டு–2044

2013 அக்டோபர் 23, புதன்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“நெருநல் உளன்ஒருவன் இன்றுஇல்லை என்னும்
பெருமை உடைத்து இவ்வுலகு.”

நேற்று இருந்த ஒருவர், இன்று இல்லாமல் இறந்து போனார் என்று சொல்லப்படும் நிலையாமை ஆகிய பெருமையை உடையது இந்த உலகம்.

1. இரங்கற்குறிப்புகள்

முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களான திரு. கே.இரா. இராமலிங்கம் அவர்கள் 13-3-2013 அன்றும், திரு. க.உரொ. எட்மண்ட் அவர்கள் 2-6-2013 அன்றும், திரு. த.இரா. இராஜாராம் ரெட்டி அவர்கள் 12-6-2013 அன்றும், திரு. என். டென்னிஸ் அவர்கள் 21-6-2013 அன்றும், திரு. ர.ச. தங்கவேல் அவர்கள் 22-6-2013 அன்றும், திருமதி இலதா பிரியகுமார் அவர்கள் 23-6-2013 அன்றும், டாக்டர் கே. சௌரிராஜன் அவர்கள் 16-7-2013 அன்றும், திரு. ப. குருசாமி அவர்கள் 29-7-2013 அன்றும், திரு. கு. பாலகிருட்டினன் அவர்கள் 5-8-2013 அன்றும், திரு. கே. சின்னசாமி அவர்கள் 8-8-2013 அன்றும், மற்றும் திரு. கே.ஆர். கணபதி அவர்கள் 25-9-2013 அன்றும் மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

[பேரவைத் தலைவர்] [2013 அக்டோபர் 23

திரு. கே.இரா. இராமலிங்கம் அவர்கள் 1971 முதல் 1976 வரை தூத்துக்குடி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றினார்கள்.

திரு. க.உரொ. எட்மண்ட் அவர்கள் 1967 முதல் 1971 வரையிலும் மற்றும் 1971 முதல் 1976 வரையிலும் இரண்டு முறை திருச்செந்தூர் தொகுதியிலிருந்தும், 1977 முதல் 1980 வரை திருநெல்வேலி தொகுதியிலிருந்தும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறந்த முறையில் பணியாற்றினார்கள். மேலும், 1969 முதல் 1971 வரை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவராகவும், 1977 முதல் 1980 வரை அமைச்சராகவும் பணியாற்றினார்கள்.

திரு. த.இரா. இராஜாராம் ரெட்டி அவர்கள் 1977 முதல் 1980 வரை திண்டிவனம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பான முறையில் பணியாற்றினார்கள்.

திரு. என். டென்னிஸ் அவர்கள் 1971 முதல் 1976 வரை கிள்ளியூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றினார்கள். மேலும், அவர் 1980 முதல் 1999 வரையிலும் தொடர்ந்து ஆறு முறை மக்களவை உறுப்பினராகவும் பணியாற்றினார்கள்.

திரு. ர.ச. தங்கவேல் அவர்கள் 1977 முதல் 1980 வரை வால்பாறை தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு பாராட்டத்தக்க வகையில் பணியாற்றினார்கள்.

திருமதி இலதா பிரியகுமார் அவர்கள் 1991 முதல் 1996 வரை அரக்கோணம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நன்கு பணியாற்றினார்கள்.

டாக்டர் கே. சௌரிராஜன் அவர்கள் 1980 முதல் 1984 வரையிலும் மற்றும் 1985 முதல் 1988 வரையிலும் இரண்டு முறை தியாகராய நகர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு திறம்படப் பணியாற்றினார்கள்.

2013 அக்டோபர் 23] [பேரவைத் தலைவர்]

திரு. ப. குருசாமி அவர்கள் 1977 முதல் 1980 வரையிலும் மற்றும் 1980 முதல் 1984 வரையிலும் இரண்டு முறை அந்தியூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பான முறையில் பணியாற்றினார்கள்.

திரு. கு. பாலகிருட்டினன் அவர்கள் 1971 முதல் 1976 வரை மன்னார்குடி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றினார்கள்.

திரு. கே. சின்னசாமி அவர்கள் 1989 முதல் 1991 வரையிலும் மற்றும் 1991 முதல் 1996 வரையிலும் இரண்டு முறை சேந்தமங்கலம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு திறம்படப் பணியாற்றினார்கள்.

திரு. கே.ஆர். கணபதி அவர்கள் 1980 முதல் 1984 வரையிலும் மற்றும் 1985 முதல் 1988 வரையிலும் இரண்டு முறை சிதம்பரம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறந்த முறையில் பணியாற்றினார்கள்.

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

முற்பகல் 10-05

2. இரங்கல் தீர்மானம்

உறுப்பினர் திரு. செ. பெருமாள் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இரங்கல் தீர்மானம்.*

“சேலம் மாவட்டம் ஏற்காடு தொகுதியிலிருந்து 1989 முதல் 1991 வரையிலும், 1991 முதல் 1996 வரையிலும் மற்றும் 2011 ஆகிய